I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES R.W.2
M.C.O.P.NO.112/2020

| | | |
|---|---|---|
| Name | : | Suryaprakash |
| Father Name | : | Neelakandan |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.08.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 03.45 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

**குறுக்கு விசாரணை**

இந்த விபத்து நடந்த தேதி நினைவில்லை. TN 23 CB 1184 என்ற வாகனம் என்னுடைய தகப்பனாருடையது. அவருடைய பெயர் நீலகண்டன். விபத்து சமயத்தில் காப்பீடு நடைமுறையில் இருந்ததா என்றால் தெரியவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுனர் உரிமம் நடைமுறையில் இருந்ததா என்றால் இல்லை. நான் மைனராக இருக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் என் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தார்களா என்றால் தெரியாது.

நான் B.E. Computer Science படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் போலீசார் தான் என்னை மிரட்டி கையெழுத்து வாங்கினார்கள் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் மிரட்டியது சம்மந்தமாக வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. என்

அப்பா வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய் துறை அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக வேலை செய்கிறார். அவர் சுமார் 30 வருடமாக வேலை செய்கிறார். அவர் மாவட்ட ஆட்சியருக்கு அலுவலக உதவியாளராக இருக்கிறாரா என்றால் சரிதான்.

போலீசார் மிரட்டி கையெழுத்து வாங்கினார்கள் என்று வேலூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தேனா என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் வண்டியை யார் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு எடுத்து சென்றார்கள் என்றால் தெரியாது. ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் என்னுடைய விலாசத்தையும் என் அப்பாவின் விலாசத்தையும் யார் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. விபத்து நடந்த பிறகு எவ்வளவு நேரம் பொறுத்து என் அப்பா வந்தார் என்றால் விபத்து நடந்த இடத்திற்கு அருகில் இருந்தார். அவர் தோராயமாக 10 நிமிடத்தில் வந்தார். அது வரை நான் அங்கு தான் இருந்தேன்.

நான் படித்துள்ள நிலையில் வண்டி ஓட்டுனர் உரிமம் இல்லாமல் no parking இடத்தில் நிறுத்தி வைக்கலாமா என்றால் என் தந்தை தான் வண்டியை ஓட்டி வந்து நிறுத்தி வைத்தார். மனுதாரர் மார்கபந்து மனு போதையில் இருந்தார் என்று நான் சொல்லியுள்ள நிலையில் அவருடைய டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் விபத்து பதிவேடு எதாவது நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

என்னுடைய வாகனத்திற்கு ஓட்டுனர் உரிமம் இல்லாததாலும் என் அப்பாவின் வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் இல்லாததாலும் மனுதாரர் 3ம் தரப்பினர் என்பதாலும் நான் இளவராக இருந்ததாலும் வடக்கு காவல் நிலையம் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாலும் மேற்படி முதல் தகவல் அறிக்கை

மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது தவறு என்று மேல்முறையீடு செய்யவில்லை என்றாலும் நீதிமன்றத்தின் மூலம் முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாததாலும் நானும் என் தந்தையும் தான் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. மனுதாரர் குடித்து விட்டு நடந்து சென்றார் என்பதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் 1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களாகிய நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 04.00 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.